Registered No. M 5068

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0]  ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள்.  [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஆனிமீ 8உ 21—6—1948 ஹிஜிரி 1367 ஷாபான்மீ 13உ திங்கட்கிழமை. } இதழ் 22

## இந்தியாவிலிருந்து இஸ்லாமிய நாகரீகம் பிரிக்க முடியாது.

### ஐக்கிய முன்னேற்ற மஹாநாட்டில் டாக்டர் சையத் மஹ்மூத் முன்னுரை.

டாக்டர் சையத் மஹ்மூதை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. பெரும்பாலான இந்தியர்களுக்கு அவரைப் பற்றி நன்றாகத் தெரியும். இந்திய தேசீய முன்னணித் தலைவர்களில் அவரும் ஒருவர். தேசத்தைக் குறித்தும் முஸ்லிம்களின் அரசியலைப் பொறுத்தும் அவர் வெளியிட்ட அபிப்பிராயங்கள் தவறிப்போனதில்லை. சிக்கலான பல பிரச்னைகளில் அவர் கூறிய யோசனைகளின் சிறந்த தன்மையை பிற்கால சம்பவங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றன.

திர்ஹுத் (பீஹார்) ஐக்கிய முன்னேற்ற மஹாநாட்டில் அன்னார் நிகழ்த்திய தலைமைப் பிரசங்கத்தைக் கீழே தருகிறோம்.

— ஆசிரியர்

அன்பர்களே! இந்த மஹாநாட்டில் தலைமை வகித்து என் உள்ளக்கிடக்கை வெளியிட சந்தர்ப்ப மளித்தமைக்கு நன்றியறிவிக்கின்றேன். கடந்த இரண்டு வருஷ புரட்சிகளில் தவறான போக்கின் காரணமாக முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் தெரிந்தேயிருக்கின்றன. அவைகளை ஞாபகமூட்டி உங்களுடைய மனவேதனையை புதுப்பிக்க நான் விரும்பவில்லை. சமீபகால துக்ககரமான சம்பவங்களை மறந்து எதிர்காலத்தை நிர்மாணிப்பதில் உடனடியாக ஈடுபடும்படி உங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன். அவநம்பிக்கைக்கு இடமளிக்க வேண்டாம். இன்று முஸ்லிம்களுக்கு உறுதியும் சகிப்புத் தன்மையும்தான் தேவை. கடவுளை நம்புங்கள்; அமைதியிழக்காமல் பொறுமையுடன் நடந்துகொள்ளுங்கள். திரு குர் ஆனின் உயரிய போதனைகளில் கவனத்தை செலுத்துங்கள். உண்மையான பக்தர்களுக்கு ஆண்டவன் அளித்திருக்கும் உறுதி மொழியை எண்ணிப் பாருங்கள்.

"பயப்படவேண்டாம்; கவலையும் வேண்டாம். நம்பிக்கையுள்ளவர்களாகமட்டும் இருந்தால் நீங்கள் சிறந்தவர்களாவீர்கள்." — திரு குர் ஆன்

தெய்வ கடாக்ஷத்தில் அவநம்பிக்கைப் படுவது கூடாது. அவநம்பிக்கை பாவமாகும். அளவு கடந்த அருளாளனை ஆண்டவனை வணங்கி முறையிட்டால் நம் குறைகள் நீங்குவது நிச்சயம்.

இந்தியாவில் முஸ்லிம்களுக்குள்ள பற்றும் நம்முடைய முன்னோர்களுக்கு இருந்துவந்த நல்லெண்ணமும் உங்களுக்குத்தெரியும். இஸ்லாம் தோன்றிய அக்காலத்திலேயே இஸ்லாமுக்கு இந்தியாவிடம் தனிப் பற்று இருந்திருக்கிறது. "இந்தியாவிலிருந்து குளிர்ந்த காற்று வீசுகின்றது" என்று முஹம்மது நபி அவர்கள் அடிக்கடி சொல்லியிருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். "இந்தியா கல்வி, கலாச்சாரத்தின் உறைவிடம்' என்று ஹஜரத் அலி (ரலி) அவர்களும் சொல்லியிருக்கின்றார்.

இந்தியாவில் காலடி வைத்த அன்றிலிருந்தே இந்தியாவின் கல்வி, கலாச்சார முன்னேற்றத்தில் முஸ்லிம்கள் பெரும்பங்கு எடுத்துக்கொண்டிருக்கின்றனர். கல்வி, கலாச்சார, இலக்கிய, நாகரீகத்துறைகளில் ‘அல்பேரூனி’ செய்திருக்கும் மஹத்தான சேவைகள் அனைவருக்கும் தெரிந்தேயிருக்கின்றது. அமீர் உமர் கான்கானன், மலிக் முஹம்மத் ஜாமயி, ரஸ்கான், தாது, கபீர் முதலியோர் இந்திய பாஷைக்கும், நாகரீகத்துக்கும் செய்துள்ள சேவைகள் மஹத்தானவை. அமீர் குஸ்ரவ் எழுதிய நூல் இந்தியாவின் உயர்வை மட்டுமின்றி இந்திய மதங்களின் மேம்பாட்டை உலகுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது. குலாம் அலி ஆஸாத் தயாரித்திருக்கும் ஹிந்தி பாஷையில் கீர்த்தி வாய்ந்து விளங்கிய கவிகளின் ஜாபிதாவில் நூற்றுக் கணக்கான முஸ்லிம் கவிகளின் பெயர்கள் இருக்கின்றன. மீர் இன்ஷா எழுதியிருக்கும் நூலில் பாரசீக அரபிய வார்த்தை ஒன்றுகூட உபயோகிக்கப்படவில்லை. ஆரம்பத்திலிருந்து கடைசிவரை ஹிந்தியிலேயே எழுதியிருக்கிறார். இன்று பாஷைக்கு சேவை செய்வதாக எண்ணிக்கொண்டு பாஷைப் பிரச்னையில் சிக்கலுண்டாக்கப்படுகிறது. கடந்த காலத்தில் ஹிந்தி பாஷைக்கு செய்திருக்கும் சேவையை முஸ்லிம்கள் எதிர்காலத்திலும் செய்ய முடியும். ஆயினும் பலவந்தமாக சட்டமியற்றி நிர்ப்பந்திப்பதன்மூலம் மூளைவேலை செய்வது சாத்தியமில்லை. ஹிந்தி பாஷைக்கு சேவை செய்வதற்குப் பதிலாக தீங்கிழைக்கப்படுவதாகவே நான் நினைக்கிறேன்.

முதன்முதலாக முஸ்லிம்கள் தென்னாட்டில் குடியேறியபோது அவர்கள் கையில் அதிகாரமிருக்கவில்லை. தங்களுடன் எவ்வித ராணுவத்தையும் அவர்கள் கொண்டுவரவில்லை. “மனிதர்கள் அனைவரும் சமம்” என்ற உயரிய கருத்தை மட்டுமே கொண்டு வந்தனர். பிறகு இந்த நாட்டு மக்களுடன் சகோதரர்களாகவே வாழ்ந்தனர். இந்த நாட்டையே தங்கள் தாயகமாகக்கொண்டு இஸ்லாமிய நாகரீகத்தை ஹிந்து நாகரீகத்துடன் இணைத்துவிட்டனர். இன்று ஒருவன் என்னதான் பிரயத்தனப்பட்டாலும் இஸ்லாமிய நாகரீகத்தை இந்திய நாகரீகத்திலிருந்து பிரித்துவிடமுடியாது.

இந்தியாவின் உண்மையான சரித்திரத்தைப் படிக்கக்கூடிய சந்தர்ப்பம் இரண்டு நூற்றாண்டுகள் வரை இந்தியர்களுக்குக் கிடைக்காமல் போனது துரதிர்ஷ்டமாகும். தங்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு ஹிந்து முஸ்லிம்களிடையே பரஸ்பர வெறுப்பை வளர்க்கக்கூடிய அநேக சரித்திரங்களை ஆங்கிலேயர்கள் எழுதினார்கள். இன்று ஹிந்து முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் விரோதிக்க ஆரம்பித்துவிட்டனர். இது ஆங்கிலேயர்கள் எழுதிய சரித்திரத்தின் பலனேயாகும். ஆயினும் ஹிந்து முஸ்லிம்களை பிளவுப்படுத்த ஆங்கிலேயர்கள் செய்த சூழ்ச்சிகள், முயற்சிகளால் ஹிந்து முஸ்லிம்களின் ஐக்கிய நாகரீகத்தை மட்டும் கடைசிவரை பிரிக்கமுடியாமலேயே போய்விட்டது.

ஹிந்து முஸ்லிம், நாகரீகங்களின் ஐக்கியத்தால் புதியதொரு இந்திய நாகரீகம் உருவாயிற்று. இந்தியாவின் மூலை முடுக்குகளையும் இந்திய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் அந்த நாகரீகம் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது. இயற்கைக்கு விரோதமான இந்தியா பாகிஸ்தான் பிரிவினையால் அதை அழித்துவிடமுடியாது. டில்லியில் ஜும்மா மசூதியும், ஆக்ராவில் தாஜ்மஹாலும் அழியப்போவதில்லை. மத சம்மந்தமான கட்டடமாக இருப்பினும் ஹிந்து முஸ்லிம் கூட்டு நாகரீகத்துக்கும் சிற்பக் கலையின் ஐக்கியத்திற்கும் ஜும்மா மசூதி சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அதில் பிரதிபலிக்கும் ஐக்கியத்தை எந்த சக்தியாலும் பிரிக்கமுடியாது. இருப்பினும் ஆங்கிலேயர்கள் கையாண்ட முறைகளின் பலனாக பன்னிரண்டு நூற்றாண்டுகளின் மஹத்தான இடைக்காலத்தை அலட்சியம் செய்துவிட்டு ஹிந்து சகோதரர்களின் நோக்கம் இரண்டாயிரம் வருஷம் பின்னடைந்துவிட்டது. இன்று இந்தியா இருபதாவது நூற்றாண்டின் முன்னணியில் நிற்பதற்கு முஸ்லிம்களின் நாகரீகமும் பெருமளவுக்கு உதவி செய்திருக்கிறதென்பதை மறுக்கமுடியாது.

## 800 வருஷ முஸ்லிம் ஆட்சியில் இரண்டே கலவரங்கள் !

இந்தியாவில் முஸ்லிம்கள் மதத்தின் பெயரால் என்றுமே சண்டை செய்ததில்லை. ஹிந்து முஸ்லிம்களிடையே நடந்த யுத்தங்களெல்லாம் அரசியல் காரணங்களுக்காகவே நடந்திருக்கின்றன. ஹிந்துக்களுடன் முஸ்லிம்கள் சேர்ந்து முஸ்லிம்களை எதிர்த்தும், முஸ்லிம்களுடன் ஹிந்துக்கள் சேர்ந்து ஹிந்துக்களை எதிர்த்தும் வந்திருக்கின்றனர். ஒரு ஆட்சியை தகர்த்து வேறொரு ஆட்சி ஏற்படுத்துவதே லட்சியமாய் இருந்திருக்கிறது. மதம் என்ற பிரச்னைக்கே இடமிருந்ததில்லை.

கஜினி மஹ்மூத், தைமூர் போன்றவர்கள் சில சந்தர்ப்பங்களில் நாடு பிடிக்கும் லட்சியத்துக்காக மதத்தின் பெயரை உபயோகித்தனர் என்பது வாஸ்தவந்தான். இந்தியாவிலுள்ள முஸ்லிம் அரசர்களும், பொதுமக்களும் ஹிந்துக்களுடன் இரண்டறக் கலந்து

# பாகிஸ்தான் ஏற்பட்டதற்கு வருத்தம்.

பாகிஸ்தான் தலைநகரம் எங்கிருக்க வேண்டுமென்ற பிரச்னையில் ராவல் பிண்டி, லாஹூர், கராச்சியின் பெயர்கள் முக்கியமாக பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தன. சிலர் ராவல் பிண்டியையும், இன்னும் சிலர் லாஹூரையும் சிபார்சு செய்தார்கள். ஆயினும் பாகிஸ்தான் தலைநகருக்காக மற்றவைகளை விட கராச்சியே பாதுகாப்பான இடமாக இருக்கமுடியுமென்று மிஸ்டர் ஜின்னா நினைத்தார். எனவே கராச்சி நிர்வாகத்தை பாகிஸ்தான் மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்வதென்று அரசியல் நிர்ணய சபையில் சட்டமியற்றப்பட்டது. அதன்மூலம் கராச்சி மீது சிந்து மாகாண சர்க்காருக்கு இருந்த உரிமை போய்விட்டது. சிந்து மாகாண சர்க்கார் மூட்டைகளைக் கட்டிக்கொண்டு கராச்சியை விட்டு வெளியேறி வேறிடத்துக்கு மாறுவதைத் தவிர இனி வேறு வழியில்லை.

பாகிஸ்தான் சர்க்காரின் ஹிட்லரிஸப் போக்கால் சிந்து மாகாண லீடர்கள் மனவேதனை யடைந்திருக்கின்றனர். "பாகிஸ்தான் ஏற்பட்டபிறகு கராச்சியை இழக்கவேண்டியிருக்குமென்று முன்னமேயே நமக்குத் தெரிந்திருந்தால் நம் மாகாணம் பாகிஸ்தானையே ஆதரித்திருக்கமாட்டாது" என்று சிந்து மாகாண லீடரான மிஸ்டர் கஸ்தர் பிரலாபிக்கிறார். சிந்து மாகாணத்தின் இதர லீடர்களும் இதைப் போன்ற அபிப்பிராயத்தையே வெளியிட்டிருக்கின்றனர். கராச்சியை பிடுங்கிக் கொண்ட பிறகு சிந்து மாகாணம் வியாபாரத்துறையில் பிணமாய் விட்டதென்று சொல்லி சிந்து வாசிகள் வருந்துகின்றனர்.

இந்தியப் பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானை ஆதரித்ததற்காக முஸ்லிம் பொதுமக்கள் வருந்துகின்றனர். பாகிஸ்தானிலிருந்து திரும்பி வரும் முஸ்லிம்களைக் கேட்டால் நரகத்திலிருந்து தப்பி வந்தோம் என்றே சொல்லுகின்றார்கள். பாகிஸ்தான் ஏற்படுத்தியதற்காக முஸ்லிம் பொதுமக்கள் வருந்துவது சகஜமாய்விட்டது. ஆயினும் லீக் லீடர்களின் வளையத்தில் பாகிஸ்தான் ஏற்பட்டதற்காக முதன் முதலாக வருத்தம் தெரிவிக்கும் பெருமை மிஸ்டர் கஸ்தர் பெரியாருக்குத்தான் உரித்தானது.

பாகிஸ்தான் ஏற்படுத்தி தாங்கள் செய்த தவறால் பத்துகோடி முஸ்லிம்கள் மட்டுமின்றி வருங்கால சந்ததிகளும் பாதிக்கப்பட வேண்டியிருக்குமென்பதை மிஸ்டர் ஜின்னா உள்பட லீக் லீடர்கள் அனைவரும் உணராமலில்லை. ஆயினும் அதை வாய்விட்டுச் சொல்லுவது கேவலமென்று எண்ணி 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று வெளிப்பகட்டு கோஷங்கள் போடுகின்றனர். தங்களுடைய தவறை மறைப்பதற்கு அவர்களுக்கு வேறு வழி ஒன்றும் தோன்றவில்லை.

பாகிஸ்தானுக்கு எதிராக முஸ்லிம் உலகமே கொந்தளித்து எழக்கூடிய நாள் சமீபித்துக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தான் மீண்டும் இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டுமென்று முஸ்லிம்களே விரும்பப்போகின்றனர். முஸ்லிம்களின் ஆசை நிறைவேறாமல் அவர்களுடைய முயற்சி இறந்த பிறகு மாரடிப்பதைப் போல் பிரயோஜனமில்லாமலும் போய்விடலாம். முஸ்லிம்கள் தனித்திருப்பதே நல்லது என்ற எண்ணம் அதற்குள் இந்தியாவில் வலுவடைந்துவிடுவதும் சாத்தியமே.

பாகிஸ்தான் ஏற்படுவதற்குமுன்பே முஸ்லிம்கள் சிந்தித்திருந்தால் ஐந்தரை கோடி முஸ்லிம்களை இன்னல்களுக்கு இலக்காக்கி நாலரை கோடி முஸ்லிம்களுக்கு மரண வாரண்டு பிறப்பித்திருக்க லீக் லீடர்களால் முடியாமல் போயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இன்று வருந்துவதால் பயனென்ன?

---

ஹிந்துக்களாகிவிட்டதாக தைமூர் குற்றம் சாட்டியதும் உண்மைதான். கஜினி மஹ்மூதும், தைமூரும் இந்தியர்களல்ல என்பதை நாம் மறந்துவிடமுடியாது. மதத்தின் பெயரால் யுத்தம் செய்ய ஒளரங்கசீப் கூட துணியவில்லை. தன்னுடைய வம்சத்தினரையும் தக்காண முஸ்லிம் அரசர்களையும் எதிர்த்தே ஒளரங்கசீப்பின் பெரும்பாலான யுத்தங்கள் நடந்திருக்கின்றன.

வெள்ளையர்களின் வருகைக்கு முன்னால் ஹிந்து முஸ்லிம்கள் சகோதரர்களாகவே சேர்ந்து வாழ்ந்திருக்கின்றனர். திருவிழாக்களிலும் இதர பண்டிகைகளிலும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை பிரதிபலித்துக் கொண்டிருந்தது. எண்ணூறு வருஷ முஸ்லிம் ஆட்சியில் ஹிந்து முஸ்லிம் கலவரம் இரண்டே தடவைகள் நடந்ததாக சரித்திரம் சொல்லுகின்றது. அஹமதாபாத்திலும், காஷ்மீரிலும் சிறிய அளவில் நடந்த அந்த கலவரங்களும் முகலாய ஆட்சியின் கட்டுக்கோப்பு தகர்ந்துவிட்டிருந்த சமயத்தில் அதாவது பர்க்மீர் ஆட்சியில்தான் நடந்திருக்கின்றன. அதில் முஸ்லிம்கள் மீது குற்றஞ்சாட்டி முஸ்லிம்களுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டது குறிப்பிடத் தகுந்த விஷயமாகும்.

[பாக்கி அடுத்த இதழில்]

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 21—6—'48 திங்கட்கிழமை { இதழ் 22

# ஹைதராபாத் பிரச்னை.

**இந்தியா** ஹைதராபாத் பேச்சுவார்த்தை பற்றிய செய்திகள் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டது. ஹைதராபாத் தூதுகோஷ்டி டில்லிக்கு வரும்போதெல்லாம் இதுதான் இருதிப் பேச்சுவார்த்தை; இனி நிஜாம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த இந்திய சர்க்கார் தயாராயில்லையென்று சொல்லப்படுவதும் சில தினங்களுக்குள் திரும்பவும் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதும் போதுமென்றாகிவிட்டது 'ஹைதராபாத் தனியரசு' இந்திய இடிபாடுகள் மீதுதான் நிர்மாணிக்கமுடியுமென்று இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் சொல்லிவிட்டார். ஹைதராபாத்தின் அர்த்தமற்ற சுயேச்சையால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளை விளக்கிவிட்டு "ஹைதராபாத் அன்னிய எதிரி சக்திகளின் தளமாக அமைவதை அனுமதிக்க முடியாது. நாம் கனவு கண்டுவந்த நவ இந்தியாவை நிர்மாணிப்பதற்கு உளுத்துப்போன பழைய கட்டிடத்தை இடித்துத் தள்ளினால் தானென்ன?" என்று பண்டிதநேரு வெளியிட்ட கருத்தை வரவேற்கிறோம். எதேச்சாதிகாரத்துக்கு முற்றுப்புள்ளிவைத்து, ஆலோசனையின்பெயரால் நடக்கும் வெள்ளைசூழ்ச்சிகளுக்கு சாவுமணி அடிப்பதுடன், இந்தியாவின் அமைதியைக் குலைத்து இந்திய முஸல்மான்களுக்கு அபாயம் விளைவிக்கும் முறையில் பிதற்றிக்கொண்டிருக்கும் ஹைதராபாத் பாஸிஸ்ட் கும்பலும் ஒழித்துக்கட்டப்பட வேண்டுமென்றே இந்திய முஸல்மான்கள் விரும்புகின்றனர் ஆயினும் ஹைதராபாதுடன் இந்திய சர்க்கார் தற்காலீக, இடைக்கால ஒப்பந்தம் செய்துகொள்வதை இந்திய முஸல்மான்கள் வரவேற்க முடியாது. கடந்த நவம்பரில் கையெழுத்தான ஒரு வருஷ ஸ்தம்பன ஒப்பந்தமே இன்றைய சிக்கல்களுக்குக் காரணம் என்பது நம் முடிவு. அந்த ஒப்பந்தம் ஏற்படாமல் இருந்திருந்தால் மிகவும் நலமாய் இருந்திருக்கும். ஒப்பந்தம் மீறப்பட்டதாக பரஸ்பரம் குற்றம் சாட்டப்படுகிறது. உண்மையில் ஒப்பந்தம் அனுஷ்டிக்கப்படவேயில்லை. ஒப்பந்தம் செய்வதை விட அனுஷ்டிக்கப்படுவதே முக்கியம். ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் இரண்டு அரசாங்கங்களிலுமுள்ள பொது மக்களுக்கு தங்களுடைய நிலை என்னவென்பது தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டியத்வசியம். நவம்பர் ஒப்பந்தம் தோல்வி அடைந்ததற்கு எதிர்காலம் தெளிவாக வரையறுத்துக் காட்டப்படாததே பெரும் காரணமென்று சொல்லலாம். அதனால் எதிர் காலத்துக்காக இடைக்காலத்தை பிரயோஜனப் படுத்திக்கொள்ளும் முயற்சிகள் நடந்தன யுத்தத்தை விரும்பவில்லை யென்று இரண்டு தரப்பிலும் அடிக்கடி வற்புறுத்தப்பட்டாலும் சமாதானமான முறையில் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் யுத்தத்திற்கும் தயார் என்று இருதரப்பிலிருந்தும் செய்திகள் கிடைத்தே வருகின்றன. அதனால் இயற்கையாக கலகக்காரர்கள், விஷமிகளின் கைகள் பலமடைவது சாத்தியமாகின்றது. முற்றிலும் அரசியல் சம்மந்தமுள்ள ஒருபிரச்னை வகுப்புவாதப்பிரச்னையாக மாற்றப்பட்டிருப்பதே எல்லாவற்றையும் விட வருந்தத்தக்க விஷயம். இந்திய யூனியனிலுள்ள பொறுப்பு வாய்ந்த தலைவர்களும், ஏன்! இந்திய சர்க்காரும் கூட பிற்போக்காளர்களின் அபாயகரமான போக்குக்கு இலக்காகிவிட்டனர் என்பதை மனவேதனையுடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. பொது மக்களின் பிரதிநிதித்வமுள்ள பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் ஒன்றே நம் கோரிக்கையாக இருக்க வேண்டுமேயல்லாது மந்திரிசபை, சட்டசபை, உத்தியோகங்களில் முஸ்லிம், முஸ்லிமல்லாதாருக்கு பிரதிநிதித்வம் போன்ற இதர விஷயங்களுக்கு பேச்சுவார்த்தையில் இடமளிப்பது துரதிர்ஷ்டமேயாகும். ஆசார்ய கிருபளானியைப்போன்ற தலைவர்கள் மட்டுமின்றி ராம்மனோஹர்லோஹியாவைப்போன்ற சோஷலிஸ்ட் தலைவர்களும்கூட முஸ்லிம்கள் தங்கள் விஸ்வாசத்தை நிரூபித்துக்காட்டுவதற்கு ஹைதராபாத்துக்குப்போய் எதிர்க்கவேண்டுமென்று சொல்லுகின்றனர். இதனால் ஹைதராபாத் பிரச்னைக்கு வகுப்புவாத வர்ணம் தீட்ட ஆரம்பிக்கப்பட்டிருக்கும் காசிம் ரஸ்வியின் முயற்சி வெற்றியடைந்து வருவதாகத் தெரிகிறது. மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்து முன்னேற்றமடைவதற்குத்தான் சுதந்திரமென்பதை நாம் அலட்சியம் செய்துவிடக்கூடாது. ஹைதராபாத் இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டுமென்று நாம் கோருவது நவாப் ஒரு முஸ்லிம் என்பதற்காக அல்ல. பொதுமக்கள் நன்மையடைய முடியும் என்பதற்காகத்தான். தனித்திருந்தோ அல்லது இந்தியாவைப் பகைத்துக்கொண்டோ ஹைதராபாத் வாழமுடியாது.

# நிரஞ்ஜன சாம்ராஜ்யம்

ஏகாதிபத்தியத்தை பாதுகாப்பதற்காகவே இரண்டாவது மஹாயுத்தத்தில் ஜெர்மன், இத்தாலிய பாஸிஸ்டு சக்திகளை எதிர்த்து பிரிட்டன் போர் புரிந்தது. "நான் பிரதம மந்திரியாக இருப்பது பிரிட்டிஷ் சாம் ராஜயம் உருக்குலைந்து போவதை அனுமதிப்பதற்காக அல்ல" என்று மிஸ்டர் சர்ச்சில் துரையே சந்தேகத்துக்கிடமின்றி பன்முறை சொல்லியும் இருக்கிறார். யுத்தமுடிவும் பிரிட்டனுக்குச் சாதகமாகவே இருந்தது. அன்று உதவி பிரதமராயிருந்து சர்ச்சிலுடன் பூரணமாய் ஒத்துழைத்த மிஸ்டர் ஆட்லி துரைதான் இன்று பிரிட்டிஷ் தொழிற் கட்சி சர்க்காரின் பிரதமராகவும் இருந்துவருகிறார். இந்நிலையில் இவ்வளவு துரிதமாக எதிர்பாராத விதத்தில் ஆசிய நாடுகளிலிருந்து பிரிட்டன் வாபஸாக வேண்டிய அவசியமென்ன? வெளியேறும்படி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நிர்ப்பந்தித்த அப்பேர்ப்பட்ட நெருக்கடிதானென்ன? இதுவரை இந்திய அரசியல் வாதிகளில் பலர் புரிந்துகொள்ள முடியாமலிருந்து வரும் மர்மம் இதுதான்.

நடவடிக்கைகளின் போக்கைப்பார்த்தால் தன்னுடைய சாம்ராஜ்யத் தொடர்புகளை அறுத்துக்கொள்ள ஆட்லி சர்க்காரும் விரும்பவில்லையென்பது வெளிப்படை. பிரிட்டிஷ் ஆட்சிமுறையில் அரசரே தலைவராக இருந்துவர வேண்டுமென்று விரும்புவதுடன் பிரபுக்கள் சபையை கலைக்கும் யோஜனையையும் தொழிற்கட்சி சர்க்கார் சமீபத்தில் நிராகரித்திருக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு புதிய உருவம் தீட்டும் நோக்கத்துடன் அநேகமாய் இவ்வருஷ முடிவுக்குள் கூடவிருக்கும் இம்பீரியல் கான்பரன்ஸில் எல்லா காமன்வெல்த் மக்களையும் குறிக்கக்கூடிய ஒரு பொதுப்பதம் கண்டுபிடிக்கப்படுமென்றும் தெரிகிறது. எனவே பிரிட்டிஷ் வாபஸுக்கு தொழிற் கட்சி சர்க்காரின் பரந்த மனோபாவம் காரணமாயிருக்கலாமென்று நினைப்பதற்குமில்லை.

பரிபாலன பொருளாதாரத்துறைகளில் நசித்து விட்டதால் இந்தியாவை நிர்வகிக்கமுடியாமல் பிரிட்டன் வாபஸாயிருப்பதாக சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். அதை சரி என்று ஏற்றுக்கொள்வதற்கில்லை. பரிபாலனத்துறையில் இந்தியாவை பிரிட்டன் சுமந்துகொண்டிருக்கவில்லை. இந்தியாவுக்காக தன்னுடைய பாக்கெட்டிலிருந்து பிரிட்டன் செலவிட்டதும் கிடையாது. நம்முடைய விரல்களையே எடுத்து நம்முடைய கண்களை குத்திவிட்டுக்கொண்டே ஒரு தொழிலாளியைப்போல் பிரிட்டன் தன்னுடைய அரசியல் சக்கரத்தை ஓட்டிக்கொண்டுதான் வந்தது.

---

ஆகையால் சமஸ்தான ஆட்சிமுறையே மாற்றியமைக்கப்படாமல், பண்டித நேருவும் கண்டித்திருக்கும், ஜாகீர்தார்களின் ஆதிக்கத்தைவிட்டுவைக்கும்வகையில், ஏற்படக்கூடிய எந்த இடைக்கால ஒப்பந்தங்களாலும் பிரயோஜனமில்லை அதனால் பிற்போக்கு சக்திகள் நிம்மதியாக தங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்குத் தான்சந்தர்ப்பம் கிடைக்கும். சமரசம் ஏற்படுவதற்கு ஒரு ரஸ்வியையோ அல்லது நிஜாமையோ மட்டும் முட்டுக்கட்டையாக நினைப்பது தவறு. பிற்போக்கு சக்திகளின் பிரதிநிதியைத் தவிர காஸிம் ரஸ்வி வேறொன்றுமில்லை. ஜாகீர்தார்களின் அடாச்செயல்களுக்கு ஹிந்துக்கள் இலக்காயிருப்பதைப்போலவே அங்குள்ள ஏழை முஸ்லிம்களும் இலக்காகி கஷ்டப்படுகின்றனர். ஜாகீர்தார் கும்பலில் ஹிந்துக்கள்தான் அதிகமாயிருக்கின்றனர். இந்நிலையில் ஹைதராபாத் பிரச்னையில் வகுப்புவாதத்தைப் புகுத்துவது மேலும் சிக்கல்களை உண்டுபண்ணுவதேயாகும். ஹைதராபாத் பிரச்னையை வளர்த்துக்கொண்டிருப்பதையோ அல்லது இடைக்கால தற்காலீக ஒப்பந்தங்களால் மேலும் மனக்கசப்புகளும் வேற்றுமைகளும் வளர சந்தர்ப்பமளிக்கப்படுவதையோ நாம் வன்மையாக ஆட்சேபிக்கிறோம் அதனால் சூழ்நிலையை விஷமயமாக்கும் சந்தர்ப்பம் இருதரப்புவாதிகளுக்கும் கிடைத்துவிடும் என்று அஞ்ச வேண்டியிருக்கிறது ஹைதராபாத் சுதந்திரத்தை இந்தியா விட்டுவைக்கப் போவதில்லையென்று அறிவித்தாய்விட்டது. தனித்திருப்பதில் உள்ள அபாயங்களை ஹைதராபாத்தும் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆகையால் இரண்டு அரசாங்கங்களுக்குமிடையே ஏற்படும் ஒப்பந்தம் நிரந்தரமாய் இருக்க வேண்டும். வகுப்புவாரி பிரதிநிதித்வ பிரச்னைகளைத் தூண்டுவது அவசியமற்ற பேச்சாகும். வகுப்பு வேற்றுமையற்ற அடிப்படையில் பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை ஏற்படுத்த ஹைதராபாத் இணங்கினால் அதுவே போதும். அவ்வித அரசாங்கத்தை ஏற்படுத்தும் வேலை ஹைதராபாத் பொதுமக்களையே சேர்ந்தது. எனவே இந்திய அரசாங்கம் தீர்மானமான, உறுதியான வழியை மேற்கொள்வதன்மூலம் ஹைதராபாதின் இரண்டுங்கெட்ட நிலைமைக்கு சீக்கிரமே முற்றுப்புள்ளி வைக்குமென்று நம்புகிறோம்.

யுத்தத்துக்குப் பிறகு பிரிட்டனின் ராணுவ நிலைமை மோசமடைந்து விட்டது. அதனால் இந்தியாவைப்போன்ற பெரியதொரு உபகண்டத்தை பாதுகாக்கும் பொறுப்பேற்க முடியாமல் போவதுடன் இங்கு வளர்ந்துவிட்ட புரட்சிகரமான உணர்ச்சிகளை கட்டுப்படுத்தக்கூடிய சக்தியையும் பிரிட்டன் இழந்துவிட்டது. எனவே வாபஸாவதைத் தவிர பிரிட்டனுக்கு வேறு வழியிருக்கவில்லை யென்று இன்னும் சிலர் சொல்லுகின்றனர். இந்த வாதம் ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருப்பினும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போதுமானதாகக் கொள்ள முடியாது. இரண்டு நூற்றாண்டுகளாகப் பாடுபட்டு எத்தனையோ சூழ்ச்சிகளைச்செய்து சம்பாதித்த சாம்ராஜ்ய செல்வத்தை அவ்வளவு லேசான காரணங்களுக்காக இழந்துவிடபிரிட்டன் சம்மதிக்குமென்று யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பிரிட்டிஷாரின் வாபஸுக்கு நாம் அனுமானிக்கும் காரணங்கள் எல்லாம் பிரிட்டிஷ் பிரசாரத்தின் விளைவு என்றே தெரிகிறது. தங்கள் திடீர் வாபஸுக்கு உண்மையான காரணங்க்ள் வெளியில் தெரியாமலிருக்க வேண்டுமென்பதே பிரிட்டிஷாரின் ஆசை.

தங்களுடைய பரந்த சாம்ராஜயம் ஒடுங்கிவிட்டதைக் குறித்து வருந்தும் ஒரு ஆங்கிலேயனும் இருப்பதாகத் தெரியவில்லை. தொழிற்கட்சியைச் சேர்ந்தவனாயிருப்பினும் அல்லது கன்ஸர்வேடிவாக இருப்பினும் ஒவ்வொரு ஆங்கிலேயனும் நிம்மதியாகவே காணப்படுகிறான். "இந்த வாபஸ்களால் எங்களுடைய ஏகாதிபத்தியம் மறைந்துவிடப்போவதில்லை அதற்கு மாறாக பலமடைந்தே வருகிறது." என்று ஒவ்வொருவனும் நம்புவதாகவே தெரிகிறது. பர்மா; இந்தியா, பாலஸ்தீனம், இலங்கை, சிங்கப்பூர் முதலியபிரதேசங்கள் தங்கள் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதைக் குறித்து எந்த ஒரு பிரிட்டிஷ்காரனும் கவலைப்படாமல் நிம்மதியுடன் இருப்பதிலிருந்து பிரிட்டிஷ் வாபஸுக்குள் ஏதோ ஒரு மர்மம் அடங்கியிருப்பதாகவும் தங்களுடைய எதிர்கால ஆதிக்கத்துக்கு! அந்த மர்மத்தையே பிரிட்டிஷார் பெரிதும் நம்பியிருப்பதாகவும் யூகிக்க வேண்டியிருக்கிறது.

இந்தியாவின் அடிப்படையற்ற திடீர் பிரிவினை, பர்மாவின் அவசர விடுதலை, இலங்கையின் சுயேச்சை சர்க்கார் பாலஸ்தீனில் பிரிட்டிஷ் மாண்டேட் ஆட்சியின் முடிவுகுறித்து பிறகு நடந்த சம்பவங்களால் பிரிட்டிஷ் வாபஸில் அடங்கியிருக்கும் மர்மத்தை ஒருவாறு தெரிந்துகொள்ள முடிகிறது.

இன்று வல்லரசுகளின் ஆதிக்கவேட்டை நாசகரமான யுத்தத்துக்கு அழைப்பு அனுப்பிவிட்டது உலகத்தை யுத்தமேகங்கள் சூழ்ந்து வருகின்றன நெருக்கடியான இச்சமயத்தில் சாம்ராஜ்ய நாடுகளின் வைஸ்ராய்கள், பிரதம நீதிபதிகள் நியமனம்; ராணுவ கடற்படை அமைப்பு, வெளி நாட்டு விவகாரம்போன்ற விஷயங்களை இங்கிலாந்தில் வைத்துக் கொண்டு உலகபடத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளை சிகப்பாகத் தீட்டிக் காட்டுவதால் பிரிட்டனுக்கு நண்பர்களும், விரோதிகளும் தோன்றலாம். அவர்கள் சாம்ராஜ்ய நாடுகளையும் யுத்தத்தில் இழுத்துவிடுவதால் பிரிட்டனுக்கு பொறுப்பும், தொந்திரவும் அதிகரிக்கலாம். அதைத் தடுக்க சாம்ராஜ்ய படத்தின் வெளித்தோற்றத்தை மாற்றுவதைத்தவிர சிறந்த உபாயம் வேறெதுவுமில்லையென்று பிரிட்டிஷ் அரசியல் மூளை தீர்மானித்ததில் ஆச்சரியப்படுவதற்கில்லை ஒரு குறிப்பிட்ட காலம் வரை சாம்ராஜ்யத்தை கண்ணுக்கு தோற்றமளிக்காத விதத்தில் மறைமுகமாய் வைத்திருந்து சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதற்கு ஒரு புதிய உடையை அணிவிக்கலாமென்றும், இன்றிலிருந்து பத்துவருஷத்துக்குள் இந்தியா, பாகிஸ்தானோ அல்லது பர்மா, சிலோன், பாலஸ்தீனமோ பிரிட்டிஷ் காமன்வெல்திலிருந்து வெளியேற முடியாதென்று பிரிட்டிஷார் நிச்சயமாக நம்புவதாகவும் தெரிகிறது.

பாலஸ்தீனில் யூதர்களைத்திணித்து ரஷ்ய, அமெரிக்க ராணுவ மோதலுக்கு வேண்டிய சூழ்நிலையை பிரிட்டன் ஏற்படுத்தி யிருக்கிறது. யூதர்களை ஆதரித்து அரபியர்களை ஒடுக்க அமெரிக்கராணுவம் பாலஸ்தீனில் நுழைந்தால் யூதர்களை ஆதரிப்பதாகச் சொல்லிக்கொண்டு ரஷ்ய ராணுவமும் பிரவேசிப்பது நிச்சயம்.

அதன் பிறகு போலந்தில் நடந்ததே பாலஸ்தீனிலும் நடக்கும். ரஷ்ய ஜெர்மனிக்கிடையே ஐந்து வருஷ அனாக்ரமிப்பு ஒப்பந்தமிருந்தும் போலந்தில் கிழக்குப்பாதியை ரஷ்யப்படைகளும் மேற்குபாதியை நாஜி படைகளும் ஆக்ரமித்துக் கொண்டிருந்தன. ரஷ்ய ஜெர்மன் மோதலுக்கு அதுவே காரணமாகவும் இருந்தது. அதைப்போலவே பாலஸ்தீனைப்போன்ற சிறியதொரு பிரதேசத்தில் உலகத்தின் இரண்டு பெரிய வல்லரசுகளின் மோதல் தவிர்க்கமுடியாததாகிவிடும். இந்நிலையில் அரபியர்களின் நண்பன் என்ற முறையில் பிரிட்டன் தன்னுடைய மறைமுக ஏகாதிபத்யத்தை பாலஸ்தீனில் நிலைநாட்டிக்கொள்ள முடியும். இதெல்லாம் பிரிட்டிஷ் திருவிளையாடல்கள்.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால் பிரிட்டிஷ் ராஜதந்திரம் சாம்ராஜ்ய படத்தின்வர்ணத்தை மாற்றியிருக்கிறது; வெளிப்படையாக விடுவிக்கப்பட்ட நாடுகள் சுதந்திரத்துடன் காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் பிரிட்டிஷ் ராஜதந்திரம், பிரிட்டிஷ் உதவி

# காஷ்மீர் சிங்க கர்ஜனை.

—[ ஷேக் அப்துல்லா ]—

ஒரு பக்கம் இஸ்லாமின் பெயரால் மிஸ்டர் ஜின்னா நம் வீடு வாசல்களை கொள்ளையடிக்கவும், பெண்டு பிள்ளைகளை மானபங்கம் செய்யவும் தூண்டுகிறார். இன்னொரு பக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு அனுதாபத்துடன் சிநேக பாவமான கையை நீட்டுகிறார். நம்முடைய விதிக்கு நாமே எஜமானர்களாக இருக்க கடந்த பதினேழு வருஷங்களாக போராடினோம். நம்முடைய ஸ்தாபனத்தின் கதவுகள் எல்லா வகுப்பினருக்கும் திறந்துவிடப்பட்டபோது சில முஸ்லிம்கள் அதை எதிர்த்து நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டனர். ஆயினும் உணர்ச்சி வேகத்தில் அடித்துக்கொண்டு போகப்படுவதற்கு நாம் இணங்கவில்லை. நம்முடைய சுதந்திரப் போராட்டம் 1946-ல் கடைசி கட்டத்தைக் கடந்தபோது 'காஷ்மீரை விட்டு வெளியேறு' என்று கோஷித்தேன். ஆங்கிலேயர்கள் வெளியேறுகையில் குலாப் சிங்கு ஆங்கிலேயர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்றும் மஹாராஜா ஹரிசிங்கு ஜம்மு காஷ்மீர் மஹாராஜாவாக இருக்க விரும்பினால் சமஸ்தான ஆட்சி பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் கோரினேன். பண்டித நேருவும், இந்தியாவின் பெரிய அரசியல் ஸ்தாபனங்களும் நம்மை ஆதரித்தன. மஹாத்மா காந்திஜி நமக்கு உற்சாகமூட்டினார். ஆயினும், நம் கிளர்ச்சியை எதிர்த்தது மட்டுமின்றி, மிஸ்டர் ஜின்னா, நம்மை குண்டர்களென்றும் காலிகளென்றும் பெயரிட்டழைத்தார். லாஹூரிலுள்ள சில லீக் பத்திரிகைகள் நம்மை ஆதரிக்க முன்வந்ததையும் மிஸ்டர் ஜின்னா தடுத்துவிட்டார்.

பண்டித நேருவையோ மிஸ்டர் ஜின்னாவையோ நம்பி நாம் கிளர்ச்சியை ஆரம்பிக்கவில்லை. கடவுள் அனுக்கிரஹத்தை நம்பியே நாம் துடங்கினோம். நியாயம் நம் பக்கமிருந்தது. முடிவில் நமக்கு வெற்றியும் கிடைத்துவிட்டது அதன் பிறகு கலவரங்கள் மூண்டன. வகுப்பு கலவரங்களின் மோசமான நாட்களிலும்கூட காஷ்மீர் மக்கள் தங்கள் நிதான புத்தியை இழக்கவில்லையென்று நாம் தலை நிமிர்ந்து சொல்ல முடியும். இந்த இடைக்காலத்தில் வெளியிலிருந்து காஷ்மீருக்கு வந்த பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு நாம் சாத்தியமான அளவுக்கு சேவை செய்தோம். காக் சர்க்கார் இங்கும் கலவரங்களைத் தூண்டிவிடச் செய்த முயற்சிகள் பலிக்காமல் போய்விட்டன. நான் சிறையிலிருந்து விடுதலை அடைந்த பிறகு இந்தியா பாகிஸ்தான் டொமினியன்களில் காஷ்மீர் எதனுடன் சேருவதென்ற பிரச்னை எழுந்தது. முதலில் நம்முடைய சுதந்திரப் பிரச்னை தீர்ந்த பிறகுதான் எந்த டொமினியனுடன் சேருவதென்ற பிரச்னை தீர்க்கமுடியுமென்று நான் சொன்னேன். பண்டித நேருவும் மஹாத்மா காந்தியும் தனி நபர் அதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி மஹாராஜாவை வற்புறுத்தினார்கள். அத்துடன் மகாராஜாவுடன் ஸ்தம்பன ஒப்பந்தம் செய்துகொள்ள இந்திய சர்க்காரும் மறுத்துவிட்டது

நான் டில்லியிலிருந்த சமயத்தில் காஷ்மீர்மீது படையெடுத்து தாக்க மிஸ்டர் ஜின்னா மலைஜாதியினரை அனுப்பினார். அவர்கள் முஜப்பர் ஆபாத்தில் ஹிந்து, முஸ்லிம், சீக்கியர்களைக் கொலை செய்துவிட்டனர். அவர்களுடைய வீடுகளைக்கொள்ளையடித்தனர். நான் திரும்பிவந்தபோது எதிரி ஸ்ரீநகரின் கதவை தட்டிக்கொண்டிருந்தான். காஷ்மீர் பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட ஸ்தம்பன ஒப்பந்தம் அமுலிலிருக்கும்போதே பாகிஸ்தான் இதையெல்லாம் நடத்திவிட்டது. பத்து ரூபாய் வீதம் நம்முடைய பெண்கள் பகிரங்கமாய் விற்கப்பட்டனர். நாம் காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்தோம். அச்சமயம் "ஷேக் சாஹிப்! நீங்கள் இப்பொழுது நிர்ப்பந்தமான வகையில் இந்தியாவுடன் சேருகிறீர்கள். சண்டை தீர்ந்த பிறகு தாங்கள் எந்த யூனியனுடன் சேர விரும்புகிறீர்களோ அதனுடன் சேர்ந்துகொள்ளும்படி நான் யோஜனை கூறுகிறேன்" என்று பண்டித நேரு மிகவும் தெளிவாகக் கூறினார். இன்று நீங்கள் எந்த யூனியனுடன் சேருவதென்பதை தீர்மானித்தாக வேண்டும். ஒருபுரம் நம்முடைய வீடுகளைக் கொள்ளையடித்து நம் பெண்டு பிள்ளைகளை மானபங்கம்செய்ய கொள்ளைக்கூட்டத்தினரைத்தூண்டிய மிஸ்டர் ஜின்னா இருக்கிறார். இன்னொரு புரம் நம்மை அனுதாபத்துடன் ஆதரித்த பண்டித ஜவஹர்லால் நேரு இருக்கிறார். நாம் சத்தியத்துக்காக போராடுகிறோம். ஆகையால் வெற்றி நமதே என்பது நிச்சயம். நம்மை வீழ்த்த முயற்சிப்பவர்கள் தானே வீழ்ச்சியடையப்போகிறார்கள். இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் காஷ்மீர் இணைப்புப் பிரச்னை யுத்தத்துக்கு முன்னாலிருந்த பிரச்னையாகும். யுத்தத்தை ஜயித்த பிறகு பாகிஸ்தானுடன் இணைப்பு என்ற பிரச்னையே எழமுடியாது.

# லீக் தலைவர்களே! இன்னுமா வீண் பிடிவாதம்!

[ கடையநல்லூர் த. கா. மு. முஹம்மது யூசுப் ]

முஸ்லிம் லீக் பிறந்து வளர்ந்த ஐக்கிய மாகாணம். முஸ்லிம்கள் படுகொலைக்குள்ளான பீஹார், லீக்கின் பாகிஸ்தான் கோரிக்கையில் ஒத்துழைத்த அஸ்ஸாம், மேற்கு வங்க, ஒரிஸ்ஸா மாகாண முஸ்லிம்கள் லீகைக் கலைத்துவிட்டு கால, தேச வர்த்தமானங்களுக்கேற்ப தங்கள் அரசியல் கொள்கைகளை மாற்றிககொண்டிருக்கும்பொழுது சென்னை மாகாணத்தில் நீங்கள் முஸ்லிம்களின் குறைகளை எடுத்துச் சொல்ல முஸ்லிம்களுக்கென ஒரு தனி ஸ்தாபனம் வேண்டுமென்று திரும்பத்திரும்பச் சொல்லிவருகிறீர்களே! குறைகளை மாத்திரம் எடுத்துச் சொன்னால் போதுமா? அதை நிவர்த்தி செய்ய வழி என்ன என்பதை சிந்தித்து அதற்காவன செய்ய வேண்டாமா? காலத்தின் போக்கை சரிவரத்தெரிந்து, மறைந்திருக்கும் உண்மைகளை உணர்ந்து. பழைய வீண் நம்பிக்கைகளைவிட்டு, தவறான போக்கால் இழந்துவிட்ட அந்தஸ்தை கௌரவத்துடன் அடையும் வழியில் உங்களின் முயற்சிகளைப் பயன்படுத்துங்கள். இன்று நீங்கள் பாட ஆரம்பித்திருக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைப்பல்லவி உண்மையானால் லீகின் துவேஷப் பிரசாரத்தினாலேற்பட்டிருக்கும் பகைமை உணர்ச்சியை லீக் மூலமே போக்கிவிடலாமென்று நினைப்பது பைத்தியக்காரத்தனம் அல்லவா?

எனவே முஸ்லிம்கள் லீகையும் முஹம்மது இஸ்மாயில் சாஹிபையும் விட்டு தைரியமாய் காங்கிரஸில் சேர்ந்து லீக்கின் விஷப்பிரசாரத்தால் வளர்ந்துவிட்ட பகைமை, அவநம்பிக்கை என்னும் விஷ விருட்சத்தை வெட்டி வீழ்த்த முன்வரவேண்டும். அதைவிட்டு பழைய போக்கிலே போய்க்கொண்டிருப்பது சரியல்ல. பழைய சரித்திரங்கள் நமக்கு படிப்பினையாக இருக்கட்டும்.

ஸ்பெயின் முஸ்லிம்களின் தவறான போக்கால் அவர்கள் அடைந்த கதியையும் (இந்தியாவில் அவ்வாறு ஏற்படாமல் தடுக்க மௌலானா ஆஸாத் அவர்களை நமக்குத் தந்தருளிய எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட காரணங்களையும், 800 வருஷ முஸ்லிம்களின் ஆட்சி மறைந்துபோன சரித்திரங்களையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

லீகின் தவறான பிரச்சாரத்தினாலும், கொள்கையினாலும் இந்தியாவில் முஸ்லிம்களின் நிலைமை என்ன? எடுத்ததற்கெல்லாம், காங்கிரஸ்காரர்களின் ஆட்சி; இதில் நாம் என்ன செய்யமுடியுமென்று சொல்லும் அளவுக்கு முயற்சியின்மை குடிகொண்டுவிட்டது. அரசியலில் வகுப்பு வாதத்துக்கு இடமில்லையென்று இந்திய யூனியன் பார்லிமெண்டில் தீர்மானித்ததை சென்னையில் கூடிய லீக்காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கண்டித்து முஸ்லிம்களுக்கு தனித்தொகுதி வேண்டுமென்று தீர்மானம் செய்ததோடு கடமை தீர்ந்துவிட்டதாக நினைத்துக்கொண்டிருப்பதிலிருந்து உங்களின் பழைய போக்கு மாறினதாகத் தெரியவில்லை.

இவ்வித நிலைமையிலேயே இருந்துகொண்டிருக்கப் போகின்றீர்களா? அல்லது இந்த நாடு எங்கள் நாடு. எங்கள் அரசாங்கம். என்று தைரியமாய் தலை நிமிர்ந்து சொல்லக்கூடிய நிலைமைக்கு திருந்திக் கொள்ளப் போகின்றீர்களா? அழிவு முனையில் ஆர்வம் செலுத்துவதைவிட்டு 'ஒன்றும் நன்றே செய்க, நன்றும் இன்றே செய்க' என்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்து லீகைவிட்டு காங்கிரஸில் சேர்ந்து நாட்டுக்கும் முஸ்லிம் சமூக வளர்ச்சிக்கும் சேவை செய்வதுடன் உங்கள் வருங்கால சந்ததியார்களுக்கு வழிகாட்டிகளாய்த் திகழும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜெய்ஹிந்த்!

## எல்லை காந்தி கைது

எல்லை காந்தி கான் அப்துல் கபார்கான் பஹதூர் கேல் என்னுமிடத்தில் பாகிஸ்தான் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கோஹாட்ஜில்லா மாஜிஸ்டிரேட்டால் மூன்று வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார் முழுவிபரங்கள் அடுத்த இதழில்.

## ஸ்ரீ டேனியல் தாமஸ் மறைவு

சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த சென்னை மதுவிலக்கு, போக்குவரத்து இலாகா மந்திரி ஸ்ரீ டேனியல் தாமஸ் 15-ந்தேதி இரவு 9-மணிக்கு தமது 59-வது வயதில் காலமானார். அன்னாரின் குடும்பத்தினருக்கும் நண்பர்கள் உறவினர்களுக்கும் மனபூர்வமான அனுதாபத்தை அறிவித்துக்கொள்கிறோம்

## சிதம்பரம் சர்வகலாசாலை ஸ்தாபகர் ராஜாஸர் அண்ணாமலைசெட்டியாரின் மறைவு

அநேக கல்வி ஸ்தாபனங்கள், ஆஸ்பத்திரிகளுக்கு ஏராளமான நன்கொடைகள் அளித்த செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் தமது 67-வது வயதில் காலமானார். அன்னாரின் குடும்பத்தினர் பந்துஜனமித்திரர்களுக்கு நம் அனுதாபம் உரித்தாகுக.

# — தமிழ்நாடு காங்கிரஸின் கடமையும் — பொறுப்பும்

—[ காரைக்குடி ஸ்ரீ வி. பரமசிவம் ]—

காந்திஜியின் முப்பது வ்ருஷத்திய சத்திய சோதனை காங்கிரஸ்காரர்கட்கு ஒரு படிப்பினையை உண்டாக்கவில்லையானால் அவரது மரணமாவது நல்ல பாடத்தைக் கற்பித்திருக்க வேண்டும். ஆனால் உண்மைவேறு விதமாக இருக்கிறது. காங்கிரஸ்காரர்களிடையே வகுப்புஉணர்ச்சி பலமடைந்துவருவதற்கான அறி குறிகள் தென்படுகின்றன. ஜவஹர்லால்ஜீயே இந்தக் குறையை கோயம்புத்தூரில் பகிரங்கமாகக் குறிப்பிட்டுக் கண்டிக்கும் அளவுக்கு சென்னை மாகாணம் சீரழிந்து விட்டதென்றால் காந்திஜியைப் பின்பற்றுகிறோம் என்று பிதற்றுவதில் பொருளில்லை.

மாகாண அரசாங்க நிர்வாகத்தில் திறமையை விட ஜாதிக்குச் சலுகை அதிகமென்று குறை கூறப்படுகிறது. கல்வி ஸ்தாபனங்களில் ஜாதீய அடிப்படையில் அனுமதி அளிக்கப்படுவது நாடறிந்த உண்மை. ஜாதியை மறந்திருக்கின்ற பல மாணவர்கள் இஞ்சினீயரிங் கல்வி, மருத்துவக்கல்வி கற்பிக்கும் கல்லூரிகளின் பக்கம் செல்வதாக இருந்தால் ஜாதிப் பட்டயத்தைச் சுமந்து செல்லவேண்டி யிருப்பது வருந்தத்தக்கதல்லவா ?

சென்னை அரசாங்கம் மக்கள் மனநிலையை எவ்வளவு தூரம் அறிந்துகொள்ள முயன்றிருக்கிறதென்பதை நான் அறியேன் ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இதை நன்கு அறியக் கடமைப்பட்டிருக்கிறது. மக்களின் மனக் குறையைப் பிரதிபலித்து அதற்குத் தகுந்தாற்போல் அரசாங்கத்தின் திட்டங்களை மாற்றுமாறு பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல மக்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் மனக்குறைஎண்ணற்றவை. குறைகள்நியாயமானவையா நியாயமற்றவையா என்று பரிசீலிக்க வேண்டியதும், நியாயமானவையாக இருந்தால் அவற்றைத் தீர்க்க அரசாங்கத்தைத் தூண்டுவதும். நியாயமற்றவையாக இருந்தால், மக்களிடம் நேரில் அணுகி அவர்களைத் திருப்திப்படுத்தி நியாயமில்லாதது என்று உணருமாறு செய்வதும் ஸ்ரீ காமராஜ் அவர்களின் கடமையென்று சொல்ல விரும்புகிறேன்.

காங்கிரஸ் சர்க்கார் என்று வாயளவில் சொல்லிவிட்டு, சர்க்காரைக் காங்கிரஸ் நடத்தவில்லையானால் பயனில்லை. சர்க்கார் செய்யும் தவறைக் காங்கிரஸ் கண்டிக்காமல் வேறு யார் கண்டிப்பது? ஸ்ரீ காமராஜ் அவர்கள் இதை நன்கு உணர்ந்தவர். ஆகவே, சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அவர் புதிய உற்சாகத்தோடு மக்களுடன் நெருங்கின தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்கத்தை காங்கிரஸ் வழியே அவர் நடத்த முயலவேண்டும். மந்திரிசபையின் விளம்பர இலாகாவாக தமிழ்நாடு காங்கிரஸ் இருக்காதவழியில் அவர் காரியங்களை நடத்திச் செல்லவேண்டும். அதற்குறிய தகுதியும் திறமையும் அவருக்கும் அவரதுகாரியக்கமிட்டியினர்க்கும் நிச்சயமாக உண்டு.

இவ்வருஷத்திய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தேர்தல், கட்சி அரசியல்நம்மைவிட்டு அகன்றுவிட்டதென்று ருசுப்பிக்கிறது. அந்த வகையில் இனி காங்கிரஸ்காரர்களின் சக்தி விரயமாகாமல், மக்களின் நலனைப் பெருக்கும் வகையிலும், காங்கிரஸினிடம் மக்களுக்கு நம்பிக்கை குன்றாத வழியிலும் காந்திஜியின் வாழ்வும் மரணமும் நமக்கு கற்பித்துள்ள படிப்பினையை மறவாத வழியிலும் ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்கள் தமிழ்நாட்டை நடத்திச்செல்வார் என்று நம்புகிறேன். கீழ்க்கண்ட ஆலோசனைகளைத் தலைவர் காமராஜ் அவர்கட்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்!

நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் நமது கவனத்தையும் சக்தியையும், சுதந்திர லக்ஷியத்தின் பால் கட்டுப்பாடாக ஈர்த்து வைத்திருந்தார் காந்திஜி. அவரது தலைமையில் நாம் சுதந்திரம் பெற்றோம், பிறகு அவரையும் இழந்தோம். இன்று காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கு தேசீயக்கடமைகளும் பொறுப்பும்இன்னும் உண்டென்பதை மறந்துவிட்டார்கள்? எனவே பதவிச் சண்டை, சுயநலப் போராட்டங்கள் ஆகியவற்றில் காங்கிரஸ்காரர்களின் கவனம் சென்றுகொண்டிருக்கிறது. இந்தத் தவறைத் திருத்தி உங்கள் கடமை தீர்ந்துவிடவில்லை ; செய்யவேண்டிய சேவை ஏராளமாக இருக்கிறது ; "என்று அறைகூவி அழைத்து அவர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டியது காங்கிரஸ் ஸ்தாபனத்தின் கடமையல்லவா?

1. விவசாயிகளிடை வேலைசெய்யும் காங்கிரஸ் ஊழியர்களை ஒன்றுதிரட்டவேண்டும். அவர்களுக்கு ஊக்கமும் உதவியும் அளித்து தமிழ்நாடு முழுதும் கோஷ்டி கோஷ்டியாகச் சென்று விவசாயிகளை அணுகவேண்டும். அவர்களிடையே இன்று பல கட்சிகள் ஊடுருவி நிற்கின்றன. அக் கட்சிகளின் பிடிப்பிலிருந்து அவர்களை விடுவித்து, அதேசமயத்தில் உண்மையானகுறைகளை நிவர்த்திக்க அரசாங்கத்தைத் தூண்டவும் வேண்டும். அரசாங்கத்தைக் கையில் வைத்துக்கொண்டு வெரும் பிரசாரம் மட்டும் செய்வது பெரும் பலனை அளிக்காது. இவ்வருஷ முடிவிற்குள் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமும் இப் பிரசார் கோஷ்டியினரால் தொடர் பேற்படுத்திக் கொள்ளப்படவேண்டும். அதுமட்டுமல்லாமல் அரசாங்கம் இதுவரை விவசாயிகட்காக செய்திருக்கும் காரியங்களை அச்சடித்து அக்கோஷ்டியினர் மூலம் கிராமமெல்லாம் பரப்பவேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் ஸ்தாபனமொன்று, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மேற்பார்வையில் ஏற்படுத்துவதும் விரும்பத் தக்கதே.

# தமிழ் நாடு!

[ஷேக்பீர், கல்லிடை]

நீர்வளத்தை நிலவளத்தை நிதிகலைவ ளத்தை
ஏர்வளத்தை எழில்வளத்தை ஏந்தியபொன் னாடு

தாவிடுந்தா மிரவருணி காவிரிதென் பெண்ணை
காவிமலர் மேவியபல் வாவிதிகழ் நாடு

பொன்னுமின்னும் பல்லுலோகம் தன்னகத்தே கொண்டு
பன்முறையி லேசிறந்த தன்மையுள்ள நாடு

நெல்முதல் பல்தானியங்கள் மெல்கிழங்கு கனிகாய்
நல்மணங்க மழ்மலர்கள் நல்குமுயர் நாடு

சொற்பொருட்சு வைததும்பும் அற்புதக்க விகளை
பொற்புடன ளித்தகம்பர் உற்பவித்த நாடு

தெள்ளமுத வனையவின்ப வள்ளுவர் மொழிகளை
உள்ளமுண்டு வந்துநிற்கும் ஒப்பிலாத நாடு

சுந்தரச்சு தேசகீதம் செந்தமி ழிசைத்து
தந்தகவி பாரதியார் வந்ததமிழ் நாடு

சேரசோழ பாண்டியர்கள் செம்மையாகச் செங்கோல்
தீரமாகத் தாங்கியாண்ட திவ்யதமிழ் நாடு

பஞ்செடுத்து நூற்றுநெய்து சஞ்சலமில் லாது
பஞ்சமற்று றைவதற்கு பண்புடைய நாடு

தமிழ்வளர்க்க குதித்தெழுங்க தமிழ்மொழி சோதரர்காள்
தமிழ்முழக்கம் தரணியெங்கும் தழைத்திடவே செய்வீர்

வகுப்புவாதம் விட்டொழித்து வாழ்ந்திடுவோ மொன்றாய்
பகுத்தறிவைக் கொண்டுபல பணியிழைப்போம் நன்றாய்

ஈண்டுநம்முள் பகைவிடுத்தா லின்பமுற லாமே
ஆண்டவன தற்கருள வேண்டிடுவோம் நாமே!

2. தொழிலாளர் பிரச்னையில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி அதிகசிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ் நாடு காங்கிரஸின் ஆதரவில்தொழில்பகுதிஒன்று வேலைசெய்கிறது. அதேசமயத்தில் இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரஸை ஆதரிக்க வேண்டுமென்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூறுகிறது. இந்தக் குழப்பம் தவிர்க்கப்பட்டு ஒரேவழியில் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி, சாத்தியமான எல்லாச் சலுகைகளும் தொழிலாளர்கட்குக் கிடைக்க தமிழ் நாடு காங்கிரஸ் பாடுபட வேண்டும். ஜில்லாக்களில் உள்ள பல்வேறு துறையில் ஈடுபட்ட ஒவ்வொரு தொழிற் சங்கத்தோடும் தமிழ்நாடு காங்கிரஸுக்கு தொடர்பும் பொறுப்பும் இருக்கவேண்டும். தொழிலாளர் சம்பந்தமான எந்தக்குறையிலும் தமிழ்நாடு காங்கிரஸின் குரல் பலமாக ஒலிக்கவேண்டும். உதாரணமாக ஷாப்புச் சட்டம் ஒழுங்காக அமுல் செய்யப்படவில்லை யென்ற குறைபாடு, மோட்டார் தொழிலாளர் சம்பந்தமான விசாரணைக் கோர்ட்டின் தீர்ப்பு அமுல் நடத்தப்படவில்லை என்ற விஷயம், நகரசுத்தி தொழிலாளர்கட்கு அதிகப் பஞ்சப்படி கொடுப்பதாகவுள்ள அரசாங்க உத்தரவு இன்னும் ஏட்டளவில் இருக்கும் குறை ஆகியவற்றைப்பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. இவ்விஷயங்களில் நிச்சயமாக தமிழ்நாடுகாங்கிரஸ் அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும். பொறுப்பான தொழிலாளர் ஊழியர்களை ஒன்றுசேர்த்து, அவர்கள் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு முழுதுமுள்ள தொழிற் சங்கங்களை ஒன்றுபடுத்தி விருவிருப்பாகச் சேவை செய்ய வேண்டும்.

(12- பக்கம் பார்க்க)

## நிதானமிழந்த காஸிம் ரஸ்வி.

—( A. M. அல்லாபிச்சை )—

மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர் ஜனப் A. M. அல்லாபிச்சை B. A, B.L ,அவர்கள் அடியிற்கண்ட அறிக்கையை பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளார்.—

மிஸ்டர் காஸிம் ரஸ்வி நிதான புத்தி இழந்துவிட்டதாகத் தெரிகிறது. அவருடைய தற்புகழ்ச்சியும் பிதற்றல்களும் இந்திய அரசாங்கத்தினிடமோ அல்லது இந்தியமுஸ்லிம்களிடமோ பலனளிக்கமுடியாது. இந்திய யூனியன் முஸல்மான்கள் பூரணமாய் தங்களுடைய அரசாங்கத்தை ஆதரித்து நிற்கின்றனர். காஸிம்ரஸ்வியின் பொறுப்பற்ற அபாயகரமானஉளரலை லீக் தலைவர் ஜனப் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் வன்மையாக எதிர்க்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஹைதராபாத்பிரதேசத்தில் வசிக்கும் இருபத்தைந்து லட்சம் முஸ்லிம்களுக்காக இந்திய யூனியன் முஸ்லிம்கள் தங்களுடைய ஒழுக்கத்துக்கு களங்கம் உண்டுபண்ணிக்கொள்ளும் வகையில் தங்கள் நாட்டையே அபாயத்துக் குள்ளாக்க சம்மதிப்பார்களென்று காஸிம் ரஸ்வி முட்டாள்தனமாய் நினைப்பதாகத் தோன்றுகிறது அவர் முஸ்லிம்களின் மனப்பண்பாட்டை புரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. சந்தர்ப்பம் எழும்பொழுது இந்த நாட்டை யூனியன் முஸ்லிம்கள் கடைசிவரை சாத்தியமான சகல வழிகளிலும் பாதுகாப்பார்கள் என்பது நிச்சயம். இஸ்லாமிய போதனைக்கும் மஹத்தான சரித்திரப் பெருமைக்கும் விரோதமான பயமுறுத்தல்களிலும் பொறுப்பற்ற பேச்சிலும் இறங்கவேண்டாம் என்று ஒரு முஸ்லிம் என்ற ஹோதாவில் காஸிம்ரஸ்வியைக் கேட்டுக்கொள்கிறேன்.

## காந்திஜியின் லட்சியம் எங்கே!

—( A. M. அல்லாபிச்சை )—

நம் மாகாண சர்க்கார்கள் இந்திய முஸ்லிம்களுக்கு மனவேதனையைக் கொடுத்து வருகின்றன. தங்கள் தாய் பாஷைகளான அரபி, பார்ஸி, துருக்கி பாஷைகளைப் புதைத்து விட்டு இந்தியர்களனைவரையும் ஒன்றுதிரட்டக்கூடிய பொதுபாஷையான ஹிந்துஸ்தானியை முஸ்லிம்கள் உருவாக்கினார்கள் இரண்டு லிபிகளிலும் ஹிந்துஸ்தானியை கற்கவேண்டுமென மஹாத்மா காந்திஜி நமக்குச்சொன்னார் ஆனால் நாம் காந்திஜியை மறந்து விட்டதாகவே தெரிகிறது. ஹிந்து முஸ்லிம்கள் நிரந்தர நண்பர்களாகவும் உண்மையான பிரஜைகளாகவும் வாழவேண்டுமென்பதற்காகவே காந்திஜி ஆத்மீகத்தியாகம் செய்தார். முஸ்லிம்களை நம்பும்படி மாகாண சர்க்காரை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். முஸ்லிம்கள் நம்பிக்கை துரோகம் செய்துவிட மாட்டார்களென்று என்னால் உறுதி கூறமுடியும். அப்படிச் செய்யவில்லையேல் இந்தமாகாண முஸ்லிம்களின் ஒதுங்கிய உற்சாகமற்ற நிலைக்கு சர்க்காரே ஜவாப்தாரியாக கருதப்படவேண்டியிருக்கும்.

● ● ●

### பரிதாபக் காக்ஷி.

14—6—48 காலை 7-15 மணிக்கு பன்ருட்டி சேலம் ரோட்டிலுள்ள பீம விலாஸ் ஹோட்டலில் தீத்தா என்ற ரத்தின செட்டியார் என்பவர் காப்பி இருக்கிறதா? என்று கேட்டார். ஹோட்டல் முதலாளி காப்பி இல்லையென்று பதிலளித்தார். திரும்பி வரும்பொழுது திடீரென்று ஹோட்டல் வாசற்படியில் விழுந்து உயிர் நீத்தார்- அவருக்கு ஒரு மகன் உண்டு. வாழ்க்கைத் துணைவி இல்லை. என்று நண்பர் A. S. பேம்சந்த் அறிவிக்கிறார்.

## ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்திற்காக ஹைதராபாத் முஸ்லிம்களின் புதிய கட்சி.

ஹைதராபாத்,
14—6—48.

ஹைதராபாத் சமஸ்தான முஸ்லிம்கள் அஸோஸியேஷன் பொதுக் காரியதரிசியான ஜனப் அக்பர் அலி வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில் "ரஜாகாகளின் நடவடிக்கைகளால் ஹிந்துக்கள் மனதில் முஸ்லிம்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு வருகிறது. அதை போக்குவதற்காகவே இந்த அஸோஸியேஷன் புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆஸிப் ஜாஹ் வம்சத்தினரின் ஆதரவில் மக்கள்ஆட்சியை ஏற்படுத்த முயற்சிப்பதும் கலவர சமயங்களில் ஹிந்துக்களின் உயிர், உடைமையைக் காப்பாற்றுவதும் இந்த அஸோஸியேஷனுடைய வேலையாக இருக்கும். ரஜாகார்களின் நடவடிக்கைகளால் ஹைதராபாத்திலும் வெளியிலுமுள்ள ஹிந்துக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. நாம் அதை தணிக்க முயற்சிப்போம்" என்று கூறுகிறார். அஸோஸியேஷனுக்கு ஜனப் அப்துல் வஹாப் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

# பாகிஸ்தான் தலைநகரில் 144.

சிந்துவில் கராச்சி பிரிவினையை எதிர்த்து மாகாணமெங்கும் கிளர்ச்சி வலுத்து வருகிறது. ஜில்லா மாஜிஸ்டிரேட் விடுத்திருக்கும் பத்திரிகை குறிப்பிலிருந்து கராச்சியில் கலவர நிலைமை ஏற்பட்டிருப்பதாகத்தெரிகிறது. அதிகாரிகள் முன்னேற்பாடான முறைகளை மேற்கொண்டிருக்கின்றனர். கலவரத்தை தடுக்க முன்ஜாக்கிரதை நடவடிக்கையாக 144-வது பிரிவு பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. பொதுக் கூட்டங்கள் ஊர்வலங்கள் தடைசெய்யப்பட்டிருப்பதுடன் ஆயுதங்கள் சேகரிப்பதும் ஐந்து பேருக்குமேல் கூடுவதும் தடுக்கப்பட்டிருக்கிறது. இப்பிரச்சனையில் சிந்து மந்திரி சபை ராஜினமா 'செய்துவிடுமென்று நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரிகிறது. "சிந்து விஷயத்தில் பாகிஸ்தான் அரசாங்கம் அநியாயம் செய்திருக்கிறது நம்முடன் கலந்து ஆலோசிக்கவுமில்லை" என்று சிந்து மாகாண பிரதமர் பீர் இலாயீ பக்ஷ் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

மாஜி மந்திரி காஜி பஸ்ஸுல்லா தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில், கராச்சியை சிந்திலிருந்து பிரிக்க எவ்விதத்திலும் விடமுடியாதென்று முடிவு செய்யப்பட்டதாக லர்க்கானவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. கூட்டத்தில் பேசியவர்கள் பாகிஸ்தான் அரசாங்கம் இஸ்லாமின் பெயராலும் இஸ்லாமிய ஆட்சியின் பெயராலும் பொதுமக்களை முட்டாள்களாக்கி வருகிறது. சிந்து மக்கள் தங்களுடைய கட்டிடங்களையும் பணத்தையும் பாகிஸ்தானுக்கு கொடுத்து உதவினர். ஆயினும் சிந்துவின் அதிதிகள் உபசரிப்பு தவறான முறையில் பிரயோஜனப்படுத்திக்கொள்ளப் பட்டிருக்கிறது என்று பேசினார்கள். சிந்து சட்டசபை மெம்பர்களை ராஜினமா செய்யும்படியும் பாகிஸ்தான் அரசாங்கத்துடன் ஒத்துழையாமையை ஆரம்பிக்கவும் கோரி தீர்மானம் ஒன்று நிறைவேறியது. ஜில்லா முஸ்லிம் லீக், ஸ்டூடெண்ட்ஸ் பிரடரேஷன் சார்பாக இம்மாதிரியான கூட்டங்கள் மாகாணம் பூராவும் நடக்கின்றன

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபோன்ற வேலைகள் பல உண்டு. இந்த சேவைகளை மேற்கொள்ளவேண்டியபொறுப்பு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கே உண்டு. ஆகையால் சேவைசெய்ய வரும்படி தமிழ்நாட்டு ஊழியர்களை அறைகூவி யழைத்து நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கையையும் மந்தமான போக்கையும், நாம் எல்லோரும் சேவையில் ஈடுபடுவதன் மூலம் போக்க தலைவர் காமராஜ் அவர்கள் உடனடியாக முயல வேண்டுமென்று வேண்டுகிறேன்

## நிர்மாணத் திட்டம்

காந்திஜியின் தியாகஒளி பிரகாசிக்க வேண்டுமானல், வகுப்பு ஒற்றுமை நிலவ வேண்டுமானல், வறுமைப்பிணி அகல வேண்டுமானல், ஏழைகளின் நிலை உயரவேண்டுமானல், நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றுங்கள்.

## வகுப்பு வாதம்

முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் களங்கம் நீங்கவேண்டுமானல், முஸ்லிம் எதிர்ப்பு சக்திகள் மடியவேண்டுமானல், வகுப்பு வாதம் ஒழியவேண்டுமானல் முஸ்லிம்லீக்கை ஒழித்துக்கட்டவேண்டும்.

இ. க. முகம்மது இஸ்மாயில், முத்துபேட்டை.

(நிரஞ்ஜன சாம்ராஜ்யம்— 6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் ஆதரவையே எதிர்பார்த்திருக்க வேண்டியிருக்கும். இவ்வித நிலைமை ஒரு காலத்தில் மீண்டும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு புதிய ஜனனத்தைக் கொடுக்கலாம். பாலஸ்தீன் வெற்றிக்குப் பிறகு அராபியநாடுகள் பரஸ்பர சண்டையில் பிரிட்டனுக்கு இடம் கொடுத்துவிடுவார்களோவென அஞ்சவேண்டியிருக்கிறது யுத்தத்தைப்பற்றி பிதற்றிக்கொண்டிருக்கும் தீர்க்கதரிசனமற்ற சக்திகளும் பிரிட்டிஷ் ஏஜெண்டுகளும் இந்தியா பாகிஸ்தான் இரண்டையும் மோதவிடுவதில் வெற்றியடைந்துவிட்டால் பிரிட்டனின் சாம்ராஜ்யத்துக்கு இரண்டு டொமினியன்களும் இணங்கியே யாக வேண்டு மென்பதை மறந்துவிடுவதற்கில்லை.

## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

# ★ தாயித்து. ★

—[ கே. ஏ. பழனியப்பன் ]—

### காட்சி ஒன்று:—

மாலை நேரம் இடம் மீவார் சபா மண்டபம்.

[மீவார் ராணா விககிரமன் நண்பர்கள் புடைசூழ மதுவருந்திக் கொண்டிருக்கிறான் நாட்டியப்பெண் பாடிக்கொண்டே ஆடுகிறாள்.]

வசந்தகாலம் மதுவின் காலம்
வந்தபின் கவலை இன்னும் ஏனோ
இசைவாய் என்னை அணைந்திட வாரீர்
இன்பம் தருவேன் என்றும் நானே. (வசந்த)

(இச்சமயத்தில் இளைய ராணி சிற்றன்னை கர்மவதியும் சிற்றப்பன் பாக்சிம்மனும் அங்கு பிரவேசிக்கிறார்கள்.)

பாக்சிம்மன்:—(கண்களில் நெருப்புப்பொறி கக்க) டேய் விக்கிரமா! இது என்ன சபாமண்டபமா! அல்லது தாசிகள் சதிராடும் சாலையா? பொழுது விடிந்தால் குடி; அந்திபட்டால் நாட்டியம். எதிரிகளோ மீவாரை நாற்புறமும் பதிபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீயோ குடியிலும் கூத்தியிலும் காலங்கழிக்கிறாய். ச்சீ! நீ ஒரு அரசனா? அதோபார் வானத்திலிருந்து ராணா சமர்சிங் ரத்தக்கண்ணீர் வடிக்கிறார்; உன் செய்கைகளைக்கண்டு.

விக்கிரமன்;—சிற்றப்பா! தாங்கள் வேண்டாத விஷயத்தில் தலையிடுவதுடனல்லாமல் என்னை அவமானப்படுத்தவா இங்கு வந்தீர்கள்?

பாக்சிம்மன்:—அவமானம்! நான் சொல்வதா அல்லது நீ செய்வதா? உன் செய்கையைக்கண்டு சுவர்க்கத்திலுள்ள நம் முன்னோர்கள் மனம் புழுங்குகிறார்கள். நாட்டில் நாளுக்குநாள் உன்மேல் வெறுப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. எதிரிகள் சமயம் பார்த்துக்கொண்டிருக்கின்றனர் போர்தொடுக்க. இந்நிலையில் ஒருதகுதியற்ற அரசன் மீவாரை ஆள்வதை மீவார் குடிகள் விரும்பவில்லை. ஆகையால் நீ இப்பொழுதே சகோதரன் உதயசிம்மன் வசம்ராஜ்யத்தை ஒப்படைத்துவிட்டு எங்குவேண்டுமானாலும் செல்.

(விக்கிரமன் மதுவெறி தணிந்து தன் குற்றத்தை உணருகிறான். கண்களில் நீர்தழுதழுக்கிறது. மௌனமாக கிரீடத்தை கழற்றிவைத்துவிட்டு செல்ல ஆரம்பிக்கிறான், திடீரென்று ராணி கர்மவதி அவனை கூப்பிடுகிறாள்.)

கர்மவதி:—விக்கிரமா! செல்லாதே, நில்! உன் செய்கைக்கு நீ வருந்தினதே போதும். இனியாவது ரஜபுத்திர மானத்தைக் காப்பாற்ற ரஜபுத்திரனாக ஒழுக்கமுடன் வாழ முயற்சிசெய். (கிரீடத்தை விக்கிரமன் தலையில் சூட்டுகிறாள்.) அங்கு கூடியுள்ள அனைவரும் மஹாராணா விக்கிரமனுக்கு ஜே...... (எல்லோரும் போகிறார்கள் )

### காட்சி இரண்டு:—

மாலை நேரம் இடம் குஜராதில் ராஜ பூங்காவனம்.

[குஜராத் பாத்ஷாஹ் பகதூர்ஷாவும் அவன் தம்பி சாந்த்கானும் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

பகதூர்:—சாந்த்! இதுதான் தருணம். "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்று சொல்லுவார்கள். இந்தசமயத்தை நழுவ விடக்கூடாது. நீ தான் இதற்கு சரியான ஆள். உடனே மீவார் சென்று ராணாவிக்கிரமனிடம் அடைக்கலம் புகுவதுபோல் பாவனைசெய் பிறகு உன்னை காரணமாய்க்கொண்டு மீவாரை படையெடுக்க வசதி கிடைத்துவிடும்.

சாந்த்:—சரி அண்ணா! ஏற்பாடெல்லாம் சரிதான். நாம் முஸ்லிம்கள்; அவர்களோ ஹிந்துக்கள். அதுவுமல்லாமல் நமக்கும் அவர்களுக்கும் நெடுநாட் பகை. இந்த நிலைமையில் என்னை அவர்கள் நம்புவார்களா? நம்முடைய சதி வெளியாகிவிட்டால்?

பகதூர்:—உன்னை நம்புவது உன்னுடைய சாமர்த்தியத்திலிருக்கிறது. ரஜபுத்திரர்கள் காப்பாற்றுவதாக வாக்களித்துவிட்டால் உலகமே புரண்டாலும் வார்த்தை பிரளமாட்டார்கள். மேலும் இப்பொழுது மீவாரின் நிலைமையும் சரியில்லை. உள்நாட்டுக்குழப்பம் மலிந்திருக்கிறது. டில்லி பாதுஷாஹ் ஹுமாயூனும் ராணாவுடன் விரோதமாயிருக்கிறான். ஆகையால் சாந்த்! நீ உடனே செல். தாமதிக்காதே.

சாந்த்:—அப்படியே அண்ணா. (போகிறான்)

### காட்சி மூன்று:—

மாலை நேரம். இடம் மீவார் தலைநகரான சித்தூர் கோட்டையில் நந்தவனம்.

[ராணாவிக்கிரமன் ஆழ்ந்த சிந்தனையுடன் ஒரு ஆசனத்தில் சாய்ந்து கொண்டிருக்கிறான். திடீ

ரென்று பின்புறமிருந்து சாந்த்கான் "அபயம் அபயம்" என்று கத்திக்கொண்டு ஓடிவந்து ராணாவை கட்டிக்கொள்கிறான்.]

மகாராணா:— (திடுக்கிட்டு) யார் நீ! எங்கிருந்து வருகிறாய்? உனக்குஎன்னஆபத்து? விஷயத்தை சொல்லப்பா.

சாந்த்:— மகாராணா! முதலில் காப்பாற்றுவதாக வாக்களியுங்கள். பிறகு சொல்லுகிறேன்.

மகாராணா:— காப்பாற்றுகிறேன். ஆனைவிடப்பா

சாந்த் —நானோ ஒரு முஸல்மான்; தாங்கள் ஒரு ஹிந்து. விஷயம் தெரிந்த பின் காப்பாற்ற மறுத்து விட்டால்!

மகாராணா:—(ஆத்திரத்துடன்) நீ யாராக இருந்தாலும் சரி கொடுத்தவாக்கு கொடுத்ததுதான். இந்த உலகமே எதிர்த்தாலும் உன்னைக் கைவிடேன். ரஜபுத்திரன் கொடுத்த வாக்கை காப்பாற்றியே தீருவான்.

சாந்த்கான்:— (பிடியைவிட்டுவிட்டு) நான்...... நான் குஜராத் பாத்ஷாஹ்வின் சகோதரன் என்பெயர் சாந்த்கான். என் சகோதரன் அரசை அபகரித்துவிடுவேன் என்ற பயத்தின் காரணமாய் என்னை கொலை செய்ய முயற்சித்தான். நான் தப்பி ஓடிவந்து தங்களிடம் அடைக்கலம் அடைந்துவிட்டேன். தாங்களும் காப்பாற்றுவதாக வாக்களித்து விட்டீர்கள். இதுதான் விஷயம்.

(இதைக்கேட்ட ராணாசிந்தனையில் ஆழ்கிறான்.)

சாந்த்;— பார்த்தீர்களா மகாராணா! நான் அப்பொழுதே சொன்னேனல்லவா? விஷயம் தெரிந்ததும் கைவிட்டு விடுவீர்களென்று.

ராணா:— (கோபத்துடன்) என்ன சொன்னாய்? ஒரு பொழுதுமில்லை. உன் பொருட்டு மொகலாயப் படைகள் முழுதும் எதிர்த்தாலும் நான் கொடுத்த வார்த்தைப்படி நடந்தே தீருவேன். என் உடலில் ஓடுவது ரஜபுத்திர இரத்தம் என்பதை மறக்காதே சாந்த்!

சாந்த்:— (உள்ளூர கள்ளச்சிரிப்புடன்) விடைபெற்றுக்கொள்கிறேன் மகாராணா! (தனக்குள்) பேஷ்! இந்த சாந்த்கான் போட்டவிதையும் எங்காவது முளைக்காமல் போனதுண்டா? (போகிறான்)

## காட்சி நான்கு:—

சித்தூர் கோட்டையின் உட்புரம். நடுப்பகல்.

[ராணா, மந்திரி, பிரதானி முதலியோர் அவரவர் ஆசனங்களில் அமர்ந்துள்ளார்கள் பகதூர்ஷா விடமிருந்து வந்த நிருபத்தைப்பற்றி சபையில் ஆலோசனை நடக்கிறது]

பிரதானி:—, மகாராணா! இப்பொழுது நம் படைகள் சரியான நிலைமையில் இல்லை. டில்லி சக்கரவர்த்தியும் விரோதமாயிருக்கிறார். இந்நிலையில் பகதூர்ஷாவுடன் பொருதுவது உசிதமல்ல. ஆகையால் சாந்த் கானை பகதூரிடம் ஒப்படைத்து விடுவதுதான் மேல் என்று எனக்குத் தோன்றுகிறது.

மகாராணா:— என்ன மந்திரி விஜயஸிம்மரே! உம்முடைய அபிப்பிராயமென்ன?

விஜயஸிம்மர்:— பிரதானி சொல்வது சரிஎன்றே நானும் மதிக்கிறேன்.

மகாராணா:— ஊஹூம். ஒருபொழுதும் முடியாது. நான் ரஜபுத்திரன். கொடுத்த வாக்கை காப்பாற்றியே தீருவேன். ஒருரஜபுத்திரன் போருக்கு அஞ்சினான் என்றால் இதைவிட மானக்கேடு வேறு என்ன இருக்கிறது. (ராணாவிற்கு கண்கள் சிவக்கின்றன) மந்திரி! பகதூருக்கு பதில் அனுப்பிவிடுங்கள் போருக்கு ஆயத்தமென்று. (எழுந்து வேகமாக செல்லுகிறான்.)

## காட்சி ஐந்து:—

நள்ளிரவு. இடம் சித்தூர் கோட்டை.

[கோட்டை பகதூர்ஷாவினால் முற்றுகையிடப் பட்டுள்ளது. வெளிப்போக்குவரத்து துண்டிக்கப் பட்டு ரஜபுத்திர பெண்களும் ஆண்களும் பட்டினியால் வாடுகிறார்கள். இரண்டொரு தினங்களில் கோட்டையினுள் எதிரிகள் நுழைந்து விடுவார்கள் போல் தோன்றுகிறது. கோட்டையினுள் அவசர அந்தரங்க ஆலோசனை நடக்கிறது.

ராணிகர்மவதி:— என்ன விக்கிரமா! போர் தொடுத்தாய்விட்டது. இனி யோசித்து பலனில்லை. எவ்வித மாகினும் சமாளித்தே தீரவேண்டும். சேனாதிபதியை நோக்கி) என்ன சேனாதிபதி! தங்களுக்கு ஏதாவது வழி தோன்றுகிறதா?

சேனாதிபதி.— ஊஹூம்..........

ராணி:— [சபையோர்களை நோக்கி] உங்களுக்காவது தோன்றுகிறதா? (எல்லோரும் மௌனமாயிருக்கிறார்கள்.)

ராணி:— என்ன! ஒருவருக்கும் ஒன்றும் தோன்றவில்லை! அப்படியானால்சரி. இதுதான் கடைசிவழி எனக்கு ஒன்று தோன்றுகிறது. அப்படி செய்தால் என்ன ?

விக்கிரமன்:— (ஆவலுடன்) அதென்ன அம்மா!

ராணி.— அதுவா! சகோதர உறவு தாயித்தை டில்லி பாதுஷாஹ் ஹுமாயூனுக்கு அனுப்பி அவரை என்சகோதரனாக்கிக் கொண்டு நமக்கு உதவி அளிக்கும்படி வேண்டுவதுதான்.

விக்கிரமன்:— (முகத்தை சுளித்துக்கொண்டு) ஒரு முஸ்லிம் தங்களுக்கு சகோதரனாவதா! நாம் உயிர்வாழ குலகௌரவத்தையே அர்ப்பணம் செய்வதா? கூடாது. நாம் அழிந்தாலும் கூடாது

ராணி:—விக்கிரமா! என்னசொன்னாய்? அப்படியானால் முஸ்லிம்கள் நம் சகோதரர்களல்லவென்பது உன் அபிப்பிராயமா! அத்தனை முஸ்லிம்களும் அரேபியாவிலிருந்து குடியேறியவர்களா-இங்கு? அவர்களும் இந்நாட்டவர்தானே, ஏன்? நம் சகோதரர்கள் பந்துக்கள்தானே, "இஸ்லாம்" அன்பை அடிப்படையாகக்கொண்ட தர்மம். அதைவிரும்பி நம்மில் சிலர் இஸ்லாமைத் தழுவியதால் அன்னியராகி விடுவார்களா? இல்லை. ஒரு பொழுதுமில்லை. அன்றும் இன்றும், என்றும் அவர்கள் நம் சகோதரர்களே. மதம் கடவுளை அடைவதற்கான பாதை. மதத்தைக் கொண்டு மனிதனை பிரிப்பது வடிகட்டிய முட்டாள் தனம் என்பதை இன்றாவது உணர்ந்துகொள். விக்கிரமா! நான் தாயித்து அனுப்பியே தீருவேன். (உடனே தாயத்துடன் ஒருதூதன் டில்லியை நோக்கி விரைகிறான் )

காட்சி ஆறு:—

காலைவேளை. டில்லியில் ஹுமாயூனுடைய ஆலோசனை மண்டபம்.

[பாத்ஷாஹ் ஹுமாயூன் ராணி கர்மவதியின் நிருபத்திற்குப் பதில் அனுப்பும்பொருட்டு தன் சேனாதிபதி தாதார்கானுடன் பேசிக்கொண்டிருக்கிறார்.]

ஹுமா.— தாதார்! உன் அபிப்பிராயந்தான் என்ன ?

தாதார்.— முதலாவது அவள் ஒரு காபிர். இரண்டாவது தங்களின் பரமவிரோதி. மூன்றாவதாக ஒரு முஸ்லிமுக்கு எதிராக ஒரு முஸ்லிமை தூண்டிவிட நினைக்கிறாள். நான்காவதாக ஷேர்ஷாஹ் நம் மீது படையெடுக்கப் போவதாக வதந்திகள் உலாவுகின்றன. ஆகையால் இந்த வேண்டுகோளை மறுத்து விட வேண்டியதுதான்.

ஹுமா:— தாதார்! நீ தெரியாமல் பேசுகிறாய். நாம் முஸல்மான்கள் அவர்கள் ஹிந்துக்கள். இருந்தாலும் நாம் இந்த ஹிந்துஸ்தான் மண்ணில் வாழும் வரை நாமும் இந்தியர்கள்தான். மேலும் அரசியலில் மதத்தை புகுத்துவதுபோல் முட்டாள்தனம் உலகில் வேறு ஒன்றுமேயில்லை. அவள் நம் விரோதியாயினும் இன்றுடன் அது தீர்ந்துவிட்டது. தன் சகோதரனைத் தவிர வேறு யாருக்குமே அனுப்பாத தாயித்தை நமக்கு அனுப்பியிருக்கிறாள். முஸ்லிமுக்கு எதிராக முஸ்லிமை தூண்டுவதாக நீ சொல்லுகிறாய். அது தவறு. பகதூர் செய்வது சூழ்ச்சி நிரம்பிய அக்கிரமம் அதைத்தடுப்பது சக்கரவர்த்தியாகிய என் கடமை. ஆகையால் தாயித்தை இதோ அணிகிறேன். (அணிந்து கொள்கிறார்) கர்மவதி இன்று முதல் என் சகோதரி ஷேர்ஷாஹ் படையெடுத்தாலும் பரவாயில்லை. ராணி கர்மவதியின் ஆபத்து எனக்கு வந்த. ஆபத்து (தாதார்கானை நோக்கி) இன்று மாலை நம் படைகள் புறப்பட ஏற்பாடுசெய்? (மீவார் தூதனை நோக்கி) சகோதரிக்கு உதவிசெய்யப் புறப்பட்டுவிட்டதாகச் சொல் (தூதன் போகின்றான்.)

காட்சி ஏழு:—

காலைவேளை சித்தூர் கோட்டை உட்புறம்.

[இடம் வெறிச்சென்றிருக்கிறது. ரஜபுத்திரர்களனைவரும் போரில் மாண்டுவிட்டனர். ராணாவிக்கிரமன் தப்பியோடிவிட்டான். ராணி கர்மவதி ஹுமாயூனை எதிர்பார்த்தும் சமயத்தில் உதவிவாராததால் எஞ்சிய ரஜபுத்திரப் பெண்களுடன் அக்கினியில் குதித்துவிட்டாள். சிதை இன்னும் புகைந்து கொண்டிருக்கிறது. இடிந்தகோட்டையினுள் பகதூர்ஷா கவலை தோய்ந்த முகத்துடன் உலாவுகிறான். சாந்த்கான் சந்தோஷத்துடன் வருகிறான்.]

சாந்த்:— என்ன அண்ணா! வெற்றி விழாவிற்கு ஏற்பாடு செய்யவேண்டாமா!

பஹதூர்:— (ஏமாற்ற சிரிப்புடன்) வெற்றி! எதுவெற்றி? இதுவா வெற்றி? வெற்றிதான் ரஜபுத்திரர்கள் அடைந்துவிட்டார்களே! அவர்களின் உடலில் உயிருள்ளவரை நம்மை கோட்டைக்குள் நுழையவிடாதவர்களல்லவா வெற்றி வீரர்கள். இதுவா சித்தூர் கோட்டை? இந்த இடிந்த மஹல்கள்! நொருங்கிய சுவர்கள்! சுடுகாட்டையல்லவா நாம் ஆக்ரமித்திருக்கிறோம்!

சாந்த்:— இல்லை அண்ணா! பல நூற்றாண்டுகளாக அடிமைப்படுத்த விடமாட்டோம் என்று மார் தட்டிய ரஜபுத்திர நாட்டை தாங்கள் பிடித்துவிட்டீர்கள்.

பகதூர்:— இல்லை பொய். முற்றிலும் பொய். சாந்த்! நாம் கோட்டையினுள் நுழையும் பொழுது குற்றுயிராய் கிடந்த சிலர் நம்மைக்கண்டு தங்கள் மார் பில் ஈட்டியை சொருகிக்கொண்டதை நீ பார்த்தா யல்லவா! அவர்களல்லவா வீரர்கள் அவர்கள் உயிருடனிருந்தாலும் நாம் அவர்கள் மீது ஆட்சி செலுத்தியிருக்க முடியாது.

சாந்த்:— தாங்கள் கலக்கமடைந்து பேசுகிறீர்கள் அண்ணு!

பகதூர்:— இல்லை. பகதூர் நினைத்தான் மீவார் மன்னன் தன் காலில் விழ வேண்டுமென்று. ஆனால் இன்று சித்தூர் கோட்டையின் ஒவ்வொரு குட்டிச் சுவரும் என்னைப் பார்த்து நகைக்கின்றது. இந்த சுவர்களையும் இந்த இடிந்த கோட்டைகளையுமா ஆள்வது? என்னுடைய மீவார் வெற்றி என் வாழ்விலேயே என்றும்காணுதபடுதோல்வி என் தர்மமான இஸ்லாம் என்ன போதிக்கிறது! "அன்பினுல் ஆளு" என்று அறைகூவுகிறது. நான் அக்கிரமமாய் ஆள விரும்பினேன், அதன் பலன்தான் இது. (இச்சமயத்தில் ஒரு ஒற்றன் ஒடிவருகிருன்.)

ஒற்றன்:— பாத்ஷாஹ சலாமத்! ஹுமாயூனின் படைகள்நெருங்கிவிட்டன இன்னும் சில மணி நேரத்தில் நம்மை வளைத்துக் கொள்ளும்.

பகதூர்;— பார்த்தாயா சாந்த்! கர்மவதி இறந்த பின்னும் அவள் ஆவி நம்மைவிடாது போலும். சரி சீக்கிரம் படைகளை ஒன்று சேர்த்து புறப்பட எற்பாடுசெய். தாமதிக்காதே. (போகிருர்கள் )

காட்சி எட்டு:—

காலை வேளை இடம் சித்தூர் கோட்டை உட்புறம்.

[கோட்டை மதில்கள் உடைந்து பாழாய் கிடக்கின்றன. ராணி சிதையில் ஏறிய இடம் சாம்பலாகி கிடக்கிறது. ஹுமாயூன் படைகளுடன் உள்ளே நுழைகிருர் கூட ராணுவும் வருகிருன்.]






ஹுமா:— (சிதையைப் பார்த்து திடுக்கிட்டு) ஆஹா காரியம் மிஞ்சி விட்டது. சகோதரி கர்மவதி என் உதவியை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்தாளோ! சமயத்தில் வந்து என்னுல் உதவி செய்ய முடியவில்லை (சிதையின் சாம்பலை அள்ளி] ஆ! இந்த சாம்பல்! நாட்டிற்காக உயிரீந்த நாரீமணியின் சாம்பல்! [சாம்பலின்கீழ் நெருப்பு தகிக்கிறது] (வானைநோக்கி) ஏ அல்லாஹ! இந்த சாம்பல் சகோதரி கர்மவதியின் சாம்பல்!! ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு அஸ்திவாரமாக ஆக்குவாயாக!!! ராணு! சாகேப் என்ன!

ராணு:—ஆலம் பனுஹ தங்கள் அன்பு அதை சாதிக்கும்.

ஹுமா.— மதங்கள் மனிதனை கடவுளிடம் இட்டுச் செல்லும் வழிகள். மதங்களின்பெயரால்வாள் வீசிக் கொள்வது மனித சமுதாயத்திற்கே இழிவாகும் மதங்கள் அன்புடன் வாழப் போதிக்கின்றன வேயொழிய ஆத்திரத்தைப் போதிக்கவில்லை ராணு! நம் இரண்டு சமூகங்களும் ஒருவரை ஒருவர் அடக்கி ஆள வேண்டுமென்ற எண்ணத்தை விடுத்து நேசமுடன் வாழக்கற்றுக்கொண்டால் தான் இந்திய நாடு உயர்வடைய முடியும்.

(இச்சமயத்தில் தாதார்கள் ஓடிவந்து]

பாத்ஷாஹஸலாமத்!ஷேர் ஷாஹ வங்காளம், பீஹார் மீது படையெடுத்து விட்டான் நாம் உடனே புறப்பட வேண்டும்.

ஹுமாயூன்:— சகோதரிக்கு சரியான சமயத்தில் வந்து உதவிசெய்யாததற்கு அல்லாவினுல் கொடுக்கப்பட்ட தண்டனை போலும். சரிவருகிறேன் புறப்பட எற்பாடுசெய் [ராணுவை நோக்கி] ராணுஜி வாருங்கள் ஆண்டவனிடம் ஒற்றுமைக்காக பிரார்த்தனை செய்வோம்.

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றீது தேர்ந்திட வேண்டும் இந்த
ஞானம்வந்தால் பின் நமக்கெது வேண்டும்?
(அமரகவி பாரதி)

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.